உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டோடு இணைந்து நடத்தப்படும் தமிழ் இணைய மாநாடு 2010

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார் மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

கொடீசியா வளாகம், கோவை, 26 ஜூன் 2010

தமிழ் இணைய மாநாடு 2010-ஐ முன்னிட்டு தமிழகமெங்கும் உள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள மாணவர்களுக்கும் தமிழகம் எங்கும் உள்ள தமிழ் ஆர்வலர்களுக்கும் தமிழ் கணினிப் போட்டிகள் பல நடத்தப்பட்டன. போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார் துணை முதல்வர்.

காலை 10 மணிக்கு முரசொலி மாறன் அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்கள்:

1. மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின்
2. மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் பொன்முடி
3. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு
4. தலைவர் தமிழ் இணைய மாநாட்டுக்குழு, பேராசிரியர் மு. ஆனந்தகிருட்டிணன்
5. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா
6. தலைமைச் செயலர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப
7. முதன்மைச் செயலர் திரு கணேசன், இ.ஆ.ப
8. முதன்மைச் செயலர், தகவல் தொடர்புத்துறை, திரு. பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப
9. கணித்தமிழ் சங்கத் தலைவர் திரு. ஆண்டோ பீட்டர்

வந்துள்ளோரை வரவேற்றுப் பேசிய தமிழ் இணைய மாநாட்டுக்குழுத் தலைவர் முனைவர் மு.ஆனந்தகிருஷ்ணன்,

“போட்டிகளை நடத்த முடிவெடுத்தபோது தமிழகப் பள்ளிகளில் இருந்து எத்தனை மாணவர்கள் பங்கேற்பார்கள், எவ்வளவு பள்ளிகளில் கணினிகள் இருக்கும்” என்று பயந்ததாகக் கூறினார். “ஆனால் 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டதைப் பார்த்தபோது, தமிழகப் பள்ளிகள் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது என்பதை நினைத்து ஆச்சரியமாகவும், இதுபற்றி இத்தனை நாள் அறியாமல் இருந்துவிட்டதால் வெட்கமாகவும் உள்ளது” என்று கூறினார்.

“இந்தப் போட்டிகளை நடத்த பலர் உதவினர். தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்கள், தகவல் தொழில்நுட்பத் துறை முதன்மைச் செயலர் திரு டேவிதார் இ.ஆ.ப, நாஸ்காமைச் சேர்ந்த புருஷோத்தமன், கணித்தமிழ்ச் சங்கத்தின் திரு ஆண்டோ பீட்டர், உத்தமம் அமைப்பின் தி.ந.ச.வெங்கடரங்கன், தமிழ் விக்கிப்பீடியா தன்னார்வலர்கள் ஆகியோர் கடுமையாக உழைத்து இந்தப் போட்டிகளைத் திரம்பட நடத்த உதவினர்” என்றார் பேராசிரியர்.

தொடர்ந்து மேடையில் வீற்றிருந்த துணை முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் தலைமைச் செயலருக்கும் சில வேண்டுகோள்களை வைத்தார் பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன்.

“தமிழகத்தில் விற்கப்படும் அனைத்துக் கணினிகளிலும் தமிழ் மொழியில் ஆரம்பத் திரை இருக்குமாறும், தமிழில் தட்டச்சு செய்ய தமிழ் மென்பொருள்கள் இருக்குமாறும் செய்ய தமிழக அரசு ஆணையிடவேண்டும்” என்று துணை முதல்வர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். “சீனாவில் சீன மொழியிலும், கொரியாவில் கொரிய மொழியிலும் மென்பொருள்களோடு கணினிகள் விற்கப்படும்போது தமிழகத்தில் தமிழ் மொழி இடைமுகம் இருப்பது அவசியம்” என்பதை வலியுறுத்தினார்.

“செயல்முறைக் கல்வியில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முன்னோடியாக இருக்கிறது. அதற்குக் காரணம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு” என்ற ஆனந்தகிருஷ்ணன், “பள்ளி மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி கொடுக்கும் அதே நேரத்தில் அவர்களுக்கு சமூக சேவையிலான ஆர்வத்தையும் கணினிவழியில் தூண்டவேண்டும்” என்றார்.

உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடியிடம் வேண்டுகோள் விடுத்த முனைவர் ஆனந்தகிருஷ்ணன், “ஒவ்வோர் ஆண்டும் ஒரு லட்சம் ஆய்வு ஏடுகள் தமிழக உயர்கல்வி மாணவர்களால் உருவாக்கப்படுகிறது. இதில் ஒரு பத்தாயிரமாவது தமிழ்க் கணினித்துறையில் இருப்பது, தமிழைக் கணினித்துறையிலும் இணையத்துறையிலும் முன்னேற்ற உதவும். அதற்கான ஊக்கத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் வழங்குவார் என்று தான் எதிர்பார்க்கிறேன்” என்றார்.

இறுதியாக, தலைமைச் செயலர் திரு ஸ்ரீபதி இ.ஆ.ப அவர்களை நோக்கி, “தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் இனி செம்மொழி உயராய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகம் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் நடைபெறும் என்று அறிவித்துள்ளார். இப்போது நடக்கும் மாநாடுகளின் நோக்கமே, செம்மொழி தமிழும் இணையத் தமிழும் இணைந்தே இருக்கவேண்டும் என்பது. எனவே செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலேயே இணையத் தமிழுக்காக (உத்தமம் அமைப்புக்காக) முழுநேர செயலகம் ஒன்றை உருவாக்கித்தரவேண்டும்” என்று வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் பரிசுகளை வழங்கினார்.

பரிசுகளின் விவரம்:

6 முதல் 10 வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கான “தனி நபர்” தூரிகை வரைவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:

1. முதல் பரிசு: ரூ. 7,500 பெறும் மாணவர் டி. நந்தகுமார், எஸ்.ஆர்.கே.எம்.வி ஆண்கள் பள்ளி, காஞ்சிபுரம்
2. இரண்டாம் பரிசு: ரூ. 4,000 பெறும் மாணவர் ஏ.சவுந்தர், கிரீன் பார்க் பள்ளி, நாமக்கல்
3. மூன்றாம் பரிசு: ரூ. 2,500 பெறும் மாணவிகள் ஜே. லாவண்யா, சிவகாசி நாடார் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மதுரை ....... டி.சுஷ்மிதா, ஜோசஃப் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சேலம்

6 முதல் 10 வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கான குழு வரைகலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:

1. முதல் பரிசு: ரூ. 7,500 பெறும் மாணவர்கள் இரண்டு குழுக்கள்: என்.மணிகண்டன், ஆர்.பாலசுப்ரமணி,செயிண்ட் மேரீஸ் மேல் நிலைப் பள்ளி, புதுக்கோட்டை ......... மாணவிகள் ஆஷிதா, பினிஷா, சி.எஸ்.ஐ மேல் நிலைப் பள்ளி, நீலகிரி
2. இரண்டாம் பரிசு: ரூ. 4,000 பெறும் மாணவர்கள் எம். விவேக் குமார், எஸ். திலக், ஸ்ரீ சாரதா பாலமந்திர் ஆண்கள் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி, சேலம்
3. மூன்றாம் பரிசு: ரூ. 2,500 பெறும் மாணவர்கள் ஜி. கௌதம், எஸ். விவேக்ராஜ், எஸ்.எஸ்.எம் லட்சுமியம்மாள் மேல் நிலைப் பள்ளி, நாமக்கல்

11, 12-ம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கான “தனி நபர்” அசைகலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:

1. முதல் பரிசு: ரூ. 7,500 பெறும் மாணவர் யோகேஷ், தேனி மேலப்பட்டி, இந்து நாடார் உறவின்முறை மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி, தேனி
2. இரண்டாம் பரிசு: ரூ. 4,000 பெறும் மாணவர் எஸ்.நீலகண்டன், அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, வேலூர்
3. மூன்றாம் பரிசு: ரூ. 2,500 பெறும் மாணவர் சி. சரவணப் பிரபு, செயிண்ட் மேரீஸ் மேல் நிலைப் பள்ளி, புதுக்கோட்டை

11, 12-ம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கான “குழு” அசைகலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:

1. முதல் பரிசு: ரூ. 7,500 பெறும் மாணவர்கள் அஞ்சயன் ரகு, ஆண்டோ எம்.சுஜல், கெய்ன்ஸ் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, திருநெல்வேலி
2. இரண்டாம் பரிசு: ஏதும் இல்லை
3. மூன்றாம் பரிசு: ரூ. 2,500 பெறும் மாணவர்கள் ஏ. வீரன், டி. ராமராஜ், காந்திஜி அரசு மேல் நிலைப் பள்ளி, கோவை ................. ஆர். பிரதீப் குமார், ஹரிஷங்கர், கோகுலநாத இந்து மஹாஜன மேல் நிலைப் பள்ளி, சேலம்

கல்லூரி மாணவர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் விக்கிப்பீடியா என்னும் கலைக்களஞ்சியத்தில் கலை, அறிவியல், உயிரியல், கல்வி, தொழில்நுட்பம் ஆகிய பல்வேறு துறைகளில் கட்டுரை எழுதும் போட்டி நடத்தப்பட்டது. அதில் வெற்றிபெற்றவர்கள்:

கலை, அறிவியல்

1. முதல் பரிசு: ‘எதிர்மறை ஒளிவிலகல்’ என்னும் தலைப்பில் எழுதிய என்.யோகேஷ், இந்தியத் தொழில்நுட்பக் கழகம், சென்னை
2. இரண்டாம் பரிசு: ‘எத்தனால்’ என்னும் தலைப்பில் ஆர்.பிரேமலதா சாந்தி, புதுச்சேரி
3. மூன்றாம் பரிசு: ‘பட்டு நெசவுத் தொழில்’ என்னும் தலைப்பில் எஸ்.நீலமேகன், சென்னைப் பல்கலைக்கழகம்

உயிரியல்

1. முதல் பரிசு: ‘வெண் சங்கு என்னும் வலம்புரிச் சங்கு’ என்னும் தலைப்பில் எழுதிய எம். ராஜா பிரியங்கா மேரி, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம்
2. இரண்டாம் பரிசு: ‘மாரடைப்பு’ என்னும் தலைப்பில் எழுதிய பி.இந்துமதி, டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம்
3. மூன்றாம் பரிசு: ‘சொட்டு நீர்ப் பாசனம்’ என்னும் தலைப்பில் எழுதிய மொஹிதீன் பாஷா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

தொழில்நுட்பம் மற்றும் பிற தலைப்புகள்

1. முதல் பரிசு: ‘நடுவண் புலனாய்வுச் செயலகம்’ என்னும் தலைப்பில் எழுதிய எம். நவீன் குமார், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
2. இரண்டாம் பரிசு: ‘நிலநடுக்க அளவி’ என்னும் தலைப்பில் எழுதிய பி.ருத்ரன், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
3. மூன்றாம் பரிசு: ‘நுண்ணிலை கற்பித்தல்’ என்னும் தலைப்பில் எழுதிய ஜே.தங்கராஜா, செயிண்ட் சேவியர்ஸ் கல்வியியல் கல்லூரி

இணையத்தள வடிவமைப்பு சிறப்புப்பரிசு: பி.யுவராஜ், அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி

கலை அறிவியல் துறையில் சிறப்புப் பரிசு: ‘புலிகள் பாதுகாப்புத் திட்டம்’ பற்றி எழுதிய எம்.பத்மப்பிரியா, தமிழ்நாடு மின்வளர்ச்சிக் கழகம்

====

இறுதியாக, கணித்தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. ஆண்டோ பீட்டர் நன்றி கூற, நாட்டுப்பண்ணுடன் விழா முடிவுற்றது.